விலை ரூபா! 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 02 ஏப்ரல் ( 25 - 04 - 1991 ) வியாழக்கிழமை ஓசை: 66

## வவுனியா, மன்னார்; இரு இணைப்பதிகாரிகள்

(கொழும்பு)

வவுனியா, மன்னார் மாவட்டங்களில் சிவில் நிர்வாகத்தை நடத்த இரு இணைப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் என சிறிலங்கா அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் சிபார்சின் பெயரில் இந்த இரு இணை பதிகாரிகளும் நியமிக்கப்பட்டுள்ளனர் என (4ஆம் பக்கம் பார்க்க)

### திருமலை செல்வா நகரில்

# 5 இராணுவம் பலி

# ஜீப்சிதறியது

## ஆயுதங்கள் புலிகளால் மீட்பு

(திருமலை)

திருமலையில் புலிகளின் கண்ணி வெடியில் சிக்கிய சிறிலங்கா இராணுவத்தினரின் ஜீப் வண்டி சிதறியது. அதில் பயணம் செய்த ஐந்து இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். அவர்களின ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன. புலிகள் தரப்பில் சேதம் எதுவுமில்லை.

இச் சம்பவம் பற்றித்தெரிய வருவதாவது நேற்றுக்காலை 9·20 மணியளவில் தோப்பூர் இராணுவ முகாமில் இருந்து சேருவா வெல இராணுவ முகாமிற்குச் சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் மீது செல்வநகர் என்னு மிடத்தில் வைத்து விடுதலைப் புலிகள் கண்ணி வெடித் தாக்குதலை நடத்தினர். இத் தாக்குதலின் போது இராணுவத்தினர் பயணம் செய்த ஜீப்வண்டிமுற்றாகச்சிதறியது. அதில் பயணம் செய்த ஐந்து இராணுவத்தினரும் கொல்லப்பட்டனர்.

இத் தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றிய ஆயுதங்களின் விபரம் வருமாறு

(4ஆம் பக்கம் பார்க்க)

## ஹெலி தாக்கு

(யாழ்ப்பாணம்)

வல்லை, மண்டான் ஆகிய பகுதிகளை நோக்கி நேற்றுப் பிற்பகல் 12-30 மணியளவில் ஹெலியில் இருந்து தொடர்ச்சியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. எனினும் குறிப்பிடத்தக்க சேதமெதுவும் ஏற்படவில்லை

## எலக்ரோனிக் முறையில் அறிவிப்பு

(கொழும்பு)

புகையிரத நிலைய அறிவிப்புகள் எலக்ரோனிக் முறையில் அறிவிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது முதற்படியாக மருதானை ரயில்நிலையத்தில் இன்று எலக்ரோனிக் தகவல் தொகுப்பு நிலையம் ஒன்று தொடக்கி வைக்கப்படவுள்ளது.

### மடு அகதி முகாமில்

## 7576 குடும்பத்தைச் சேர்ந்த 28,742 அகதிகள்

(மன்னார்)

மடு அகதி முகாமில் தற்போது 7576 குடும்பங்களைச் சேர்ந்த 28,742 அங்கத்தவர்கள் அகதிகளாகத் தங்கியுள்ளனர். இவர்களில் மன்னார் மாவட்டத்தில் 3598 குடும்பங்களைச் சேர்ந்த 13,358 பேரும் வவுனியாமாவட்டத்தில் 3204 குடும்பங்களைச் சேர்ந்த 12,431 பேரும் தங்கியுள்ளனர் ஏனையோர் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, திருக்கோணமலை, மட்டக்களப்பு போன்ற மாவட்டங்களைச் சேர்ந்தவர்களாவர்.

## மன்னார் மாவட்டத்தில் 630 பரீட்சார்த்திகள்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் அகதி முகாம் உட்பட இரு பரீட்சை நிலையங்களில் மொத்தம் 630 மாணவர்கள் விசேட க. பொ. த. உயர்தரப் பரீட்சைக்குத்தோற்றுகின்றனர்.

புனித சபேரியார் மகா வித்தியாலயத்தில் 460பரீட்சார்த்திகளும் மடு அகதி முகாமில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையத்தில் இடம்பெயர்ந்த 175 மாணவர்களும் தோற்று (4ஆம் பக்கம பார்க்க)

## மேதின ஊர்வலத்தில் கலாசாரப் பிரிவு ஊர்திகள்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் இந்த முறை நடைபெறவுள்ள மேதின நிகழ்ச்சியில் பங்கு பற்றுவதற்கான ஏற்பாடுகளை விடுதலைப்புலிகள் கலை கலாசாரப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

பெரிய அளவிலான ஊர்தி பவனிகளும், பிரமாண்டமான முறையில் பேரணிகள், கூட் (4ஆம் பக்கம் பார்க்க)

## சமூகப் பொறுப்புணர்ச்சியற்ற முரசொலிச் செய்தி

(நமது நிருபர்)

''சிறுவன் மீது பாலியல் வன்முறைபிரயோகித்த பெண்கள்'' என்ற தலைப்புடன் 10-04-1991இல் முரசொலி வெளியிட்ட செய்தி உண்மைக்குப் புறம்பானது. இந்தப் பொறுப்பற்ற செய்தியை வெளியிட்டமைக்காக முரசொலி நிறுவன உரிமையாளர் ஐம்பதாயிரம் ரூபாவைத் தண்டமாகச் செலுத்த வேண்டும் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயற்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மக்கள் முன்னணி விடுத்த அறிக்கையின் விபரமும் வருமாறு:

10.04.1991 அன்று ''சிறுவன் மீது பாலியல் வன்முறை பிரயோகித்த பெண்கள்'' என்ற தலைப்பில் முரசொலி பத்திரிகையில் ஒரு செய்தி வெளிவந்திருந்தது. அந்தச் செய்தியில் சம்பந்தப்பட்ட பெண்கள் ஆசிரியைகள் என்று விளிக்கப்பட்டிருந்தது.

இது உண்மைக்குப் புறம்பானது என்றும் குறித்த செய்திக்கு தம்மால் மறுப்புத் தெரிவிக்கப்பட்டிருந்த நிலையிலும்அதைக்கருத்திலெடுத்து பிரசுரிக்கத்தவறியதாலும்முரசொலி பத்திரிகை மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று வட இந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும், வடமராட்சி ஆசிரியர் சங்கமும் எம்மிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

(3ஆம் பக்கம் பார்க்க)

### தாண்டிக்குளத்தில்

## இராணுவத்தின் சூட்டினால் 6 பொது மக்கள் படுகாயம்

(வவுனியா)

வவுனியா நகருக்குச் சென்ற தமிழ்ப் பொதுமக்கள்மீது சிறிலங்கா இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதில் ஆறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்றுக்காலை 9-45 மணியளவில் தாண்டிக்குளம் இராணுவ முகாமைச்சேர்ந்த இராணுவத்தினர் வவுனியா நகருக்குச் சென்ற தமிழ்ப் பொதுமக்கள் மீது கண்மூடித்தனமான முறையில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர் இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தால் ஆறுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இதேவேளை கடந்த திங்கட்கிழமையன்று வவுனியா நகருக்குச்சென்ற குணமீனா, நாகராஜா குமரன் (வயது22) ஆகிய இருவரையும் புளொட் குழுவினர் கைது செய்துள்ளனர் இதுவரை இவர்கள் விடுவிக்கப்படவில்லை.

## பதுளையில் பஸ் விபத்து 16 பேர்மரணம்; பலர் காயம்

(கொழும்பு)

மகியங்கனையிலிருந்து பதுளை ஊடாகக் கொழும்பு நோக்கி சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் வண்டியொன்று நேற்று விபத்துக்குள்ளாகியது. இவ் விபத்தில் பதினாறு பேர் பலியானதாகவும், பலர் படுகாயத்திற்கு இலக்கானதாகவும் தெரியவருகிறது. அலிகாப்பொத்தன என்ற இடத்தில் நடந்த இவ் விபத்தில் பலியானவர்களின் சடலங்கள் அடையாளம் காண்பதற்காக ஹல்துமுல்ல ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## இடம் பெயர்ந்தோருக்கும் பண்டிகை முற்பணம்

(கொழும்பு)

வடபகுதியில் இருந்துஇடம் பெயர்ந்து வந்த ஆசிரியர்களுக்கு பண்டிகை முற்பணம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை கல்வி ராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரன் சம்பந்தப்பட்ட கல்விப் பணிமனைகளுக்கு விடுத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பூமி அதிர்ச்சியில் 52 பேர் பலி

(லண்டன்)

மத்திய அமெரிக்காவில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற பூமி அதிர்ச்சியினால் பனாமாவில் 29 பேரும், கொஸ்ரொறிக்காவில் 23 பேரும் உயிரிழந்துள்ளனர் என பி. பி. ஸி. அறிவித்துள்ளது.

பனாமாவில் ஆயிரத்திற்கு அதிகமான வீடுகளும், கட்ட (4ஆம் பக்கம் பார்க்க)

## ஆசியாவைச் சேர்ந்த 6லட். பேர் வேலையிழப்பு

(வான்கூவர்)

வளைகுடாப் போரினால் ஆசியாவைச் சேர்ந்த ஆறு லட்சம் தொழிலாளர்கள் மத்திய கிழக்கில் வேலைகளை இழந்திருக்கிறார்கள் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று கனடாவில்தொடங்கிய ஆசிய அபிவிருத்தி வங்கியின் வருடாந்த மகாநாட்டில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. வேலைகளை இழந்திருப்பதால் 150 கோடி டொலர் வெளிநாட்டுப் பணத்தை அந்த நாடுகள் இழந்துள்ளன என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## அமெரிக்க இராணுவதளம் குவைத்தில் அமைக்கமுடிவு

(குவைத்)

குவைத்தில் இராணுவதளம் ஒன்றை அமைக்க அமெரிக்கா இணங்கியுள்ளது என்று அமெரிக்கவெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேகர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் அமெரிக்காவின் இந்த பதிலை ஜேம்ஸ் பேகர் குவைத்தின் அமீருக்குத் தெரிவித்தார். முன்னதாக வருங்காலத்தில் ஈராக் தம்மைத் தாக்குமானால் குவைத்தின் தற்பாதுகாப்பிற்கு அமெரிக்க ராணுவ தளம் தேவை என்று ஜேம்ஸ் பேகரிடம் மன்னர் அமீர் கேட்டுக்கொண்டார்.

## அஸாமில் ஜூன் 8 இல் பஞ்சாப்பில் ஜூன் 22 இல்

(டில்லி)

அஸாமில் ஜூன் 8 இலும் பஞ்சாபில் ஜூன் 22 இலும், வாக்குப்பதிவு நடந்த தேர்தல் கமிஷன் தீர்மானித்துள்ளது. இத்தேர்தல்களில் வேட்பாளர்களை நிறுத்த இந்திரா காங்கிரஸ், பாரதீய ஜனதா, இந்தியகம்யூனிஸ்ட், மார்க்சிய கம்யூனிஸ்ட் ஆகிய கட்சிகளும் முன் வந்துள்ளன.

இதேவேளை அகாலிதளக் கட்சியில் பிளவுகள்ஏற்பட்டுள் (4ஆம் பக்கம பார்க்க)

## வரி விளம்பரம்

**தேவை**

மலைவேம்பு விதை, வாகை விதை தேவைப்படுகிறது.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B-2404)

## வெள்ளோட்ட விழா

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் தேவஸ்தானம் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நாளை வெள்ளிக்கிழமை காலை 8 00 மணிக்கு நடைபெற உள்ளது ஈழத்திலேயே முதன் முதலாக நிர்மாணிக்கப்பட்ட நவகோண வடிவமான சித்திரத் தேர் இது என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

**A/L 90 பொருளியல் மாணவர்களே!**
**வெளிவந்துவிட்டது!**

## "பணம்"

விலை ரூபா 35/-
1984 — 1990 வரையிலான வினாக்களையும் விடைகளையும் உள்ளடக்கியுள்ளது
அத்துடன்
பண நிரம்பல்
பணத்தின் தொழிற்பாடு
பணவீக்கம்
பணச்சுருக்கம்
விலைச்சுட்டெண் ஆகிய விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது.

**'வங்கியியல்"**
விலை ரூபா 12-50
(சிறப்பாக இலங்கை பற்றியது)
ஆசிரியர்:
திரு. மா. சின்னத்தம்பி
மொத்தமாக வாங்குவோருக்கு விசேட கழிவு வழங்கப்படும்.
எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.
வெளியீடு:
**பட்டப்படிப்புகள் கல்லூரி**
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B-2413)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். மாவட்டம்

## நிர்வாக சபைக் கூட்டம்

இடம்: நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
காலம்: 26·4 91 (வெள்ளி)
நேரம்: பி.ப. 3-00 மணி
சகல பிரிவு நிர்வாகிகளும் தவறாது வருகை தரவும்
- பொதுச் செயலாளர்
(R-1350)

## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
10-10-1915
மறைவு
28-04-1988
திதி
25-04-1991

அமரர்


### ஐயம்பிள்ளை கணபதிப்பிள்ளை

(குத்தியர்)

''சுதந்திரம்'' தேடும் விழுதைச் சுமந்ததால்....
ஆலமரத்தையே அடியோடு சாய்த்தார்கள்!
''விடுதலை வீரனை'' உற்பவித்த காரணத்தால்!
உம்மை அழித்தார்கள்!
''புலியின் தந்தை'' ''புயலின் மையம்''
என்றதால் .. உம்மைக் கொன்று சரித்தார்கள்!
மூன்று ஆண்டுகள் முடிந்தன...
நிகழ்வும் நினைவும் நெஞ்சில் இருக்கும்

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்
(R-1337)

## 31 ஆம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



உயர்திரு

### நயினை கந்தையா யோகலிங்கம்

முன்னாள் பிரதம லிகிதர்
விவேகானந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

26 - 3 - 91இல் காலமாகிய எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் 25- 4- 91 இல் எமதில்லத்தில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் இத்தால் அறியத்தருகின்றோம். இறுதிக் கிரியைகளில் உதவியும், ஒத்தாசையும் வழங்கிய உறவினர், நண்பர்களுக்கு எமது நன்றியறிதலையும் தெரியபடுத்துகின்றோம்.

இங்ஙனம்
மனைவி, மக்கள்.
2ஆம் வட்டாரம்,
நயினாதீவு.
(K-1332)

## ஈராண்டு நினைவு அஞ்சலி



அமரர் திரு சி. குலநாயகம்

அன்னை மடியில் 1950 - 04 - 26
கயவன் அழிப்பில் 1989 - 04 - 17

ஈராண்டு சென்றாலும் உம் நினைவு எம் மனத்தை விட்டு அகலாது.
உம் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்
கண்டாவளை. அம்மா, மனைவி, பிள்ளைகள் சகோதரர்கள், மருமக்கள்.
(R-1344)

## நினைவு கூருகின்றோம்...

**1991-04-25**

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் ஈச்சிலம்பத்தையிலிருந்த எமது முகாமை சிறிலங்கா இராணுவத்தினர் முற்றுகையிட்ட போது ஏற்பட்ட மோதலில் வீரமரணமடைந்த

**மதன்** (அருள்நாயகம் தயானந்தராசா - வாகரை)
**கரன்** (வெற்றிவேல் தம்பிப்பிள்ளை -முட்டுச்சேனை)

ஆகியோரை
இந்நாளில் நினைவு கூருகின்றோம்

வித்தாக விழுந்தீர்கள்!
வீறுகொண்டெழுவீர்கள்!! எம்
சொத்தாக நிலைப்பீர்கள்!
சோகத்தைத் துடைப்பீர்கள்!!

இந்த மண்ணில் இறப்புகள்!
வெந்த புண்ணில் வேலாகும்!
நொந்திடும் வேங்கை உள்ளம்!
சொந்தங்கள் கண்ணீரில் சோகம்!

எங்கள் வேதம் உங்கள் நாமம்!
எங்கள் பாடம் உங்கள் வாழ்வு!
எங்கள் பாதங்கள் உங்கள் பாதையில்!
எங்கள் வெற்றியில் உங்கள் நினைவுகள்!

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B/ 2401)


❋ குறைந்த விலை ❋ நிறைந்த தரம் ❋ சிறந்த சேவை

# எழிலகம்

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

❋ மின்சாரப் பொருள்கள் ❋ புடைவை வகைகள்
❋ கண்ணாடிப் பாத்திரங்கள், பிளாஸ்ரிக் வகைகள்
❋ சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
❋ பாடசாலை, அலுவலக உபகரணங்கள்
❋ எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள்
❋ அழகுசாதனப் பொருள்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெறுவதற்கு எழிலகத்துக்கு விஜயம் செய்யுங்கள்
குறிப்பு:- சிங்கப்பூர், அமெரிக்க கரன்சிகள் மாற்றியும் கொடுக்கபபடும்.
(B-2409)

எமது ஸ்தாபனம் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9-00 மணிமுதல் மாலை 5-30 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

**❋ சிந்தனைக்கு ❋**

செயல் பயனுள்ளதாக இருக்க, தெளிவாக வகுத்து ஏற்கப்பட்ட குறிக்கோள்களை நோக்கிச் செலுத்தப்பட வேண்டும்.

—ஜவஹர்லால்நேரு


**ஈழநாதம்**

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். *25-04-1991*
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம் :2208
த.பெ.எண்: 05


# சிறிலங்கா அரசியலில் இனவாதமே மூலதனம்

விடுதலைப்புலிகள் தமது ஆயுதங்களைக் கீழே போடும் வரை அவர்களுடன் அரசாங்கம் எதுவித பேச்சுவார்த்தையும் நடத்தக் கூடாது என எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சிறிலங்கா பாராளுமன்றத்தில் நடைபெற்ற அவசரகாலச் சட்டத்தின் மீது பேசும்போது கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கை விடுத்தவர்களில் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் பலர் அடங்குகின்றனர்.

அண்மையில் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் முன் வரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வந்தவர்கள் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கீழே போட்டால் தான் அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்கள்.

எதிர்க்கட்சியினரின் இந்தத் திடீர் மாற்றத்திற்குக் காரணம் சிறிலங்கா ஜனாதிபதி நன்கு தினங்களுக்கு முன்னர் பாராளுமன்ற உரையின் போது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அரசாங்கம் விதித்த நிபந்தனையில் இருந்து சற்று இறங்கி வந்தமையே ஆகும். இராணுவ நடவடிக்கைகளின் மூலம் புலிகளை அடிபணியச் செய்யலாம் எனத் திட்டமிட்டு தமிழ் மக்களின் மீது ஏறத்தாழ பத்து மாதங்கள் தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்ட அரசாங்கம் தனது முயற்சிகளில் பல தோல்விகளைச் சந்தித்த பின்னர் பேச்சு வார்த்தை பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளது போல் தெரிகின்றது. இதனால் பேச்சு வார்த்தைகளுக்கு முன்னர் விதித்த நிபந்தனைகள் சிலவற்றை சற்றுத் தளர்த்துமாப் போல் சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சு அமைந்திருந்தது.

விடுதலைப்புலிகளைப் பொறுத்து நிபந்தனையற்ற பேச்சுவார்த்தை என்பதே அவர்களின் முடிவாக உள்ளது. அரசாங்கத்தின் சில தளர்வுகளை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராகவில்லை. ஆனால் எதிர்க் கட்சிகளைப் பொறுத்து சிறிலங்கா அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடைபெற்று விடுமோ என்ற ஐயப்பாடும், இதனால் தமது அரசியல் வாழ்வு மழுங்கடிக்கப்பட்டு விடுமோ என்ற சந்தேகமும் தோன்றியுள்ளன. இதன் வெளிப்பாடே பாராளுமன்றத்தில் ஆயுதங்களைக் கீழே போட்டால்தான் புலிகளுடன் பேச்சுவார்த்தை என்ற குரலாகும்.

சிங்களக் கட்சிகளும் சரி, அரசியல் வாதிகளும் சரி காலத்திற்குக் காலம் தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் மூலமே தமது அரசியல் நடவடிக்கைகளை விஸ்தரித்து வந்துள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி என்பன மட்டுமல்ல இடது சாரிக்கட்சிகளுமே அவ்வாறான கொள்கையையே கடைப்பிடித்து வந்தன.

தமிழரின் தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக ஏற்பட்ட பண்டா - செல்வா ஒப்பந்தம் ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்ப்பால் கிழித்தெறியப்பட்டது அதே வேளை டட்லி - செல்வா ஒப்பந்தமும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது.

அதேவேளை தமிழருக்கு எதிரான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்போது ஒவ்வொரு சிங்களக் கட்சிகளும் போட்டிபோட்டுக்கொண்டு சட்டங்களை இயற்றியதோடு, நடவடிக்கைகளையும் மேற்கொண்டன இனவாதத்தை உயர்வாக வெளிப்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்ட காலகட்டத்தில் இனக்கலவரத்தையும் இராணுவ அடக்குமுறைகளையும் நடத்தினார்கள்.

தமது அரசியல் லாபத்திற்காக தமிழர் விவகாரத்தில் காலத்திற்குக் காலம் எதிரும் புதிருமான நிலைப்பாட்டில் செயற்பட்டு வந்த சிங்களக் கட்சிகளுடன் இன்று தமிழ்க் குழுக்கள் சிலவும் சேர்ந்துள்ளன. சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் சில வேளை பேச்சுவார்த்தை நடத்தி ஓர் தீர்விற்கு வந்துவிட்டால் தங்களின் எதிர்காலம் என்ன என்பதே அவர்களின் கவலையாகும். இதுவே அவர்களின் எதிர்ப்பிற்குக் காரணமுமாகும்.

இந் நிலையில் சகலரையும் திருப்திப்படுத்துவதாயும் சிங்கள பேரினவாத சிந்தனைக்கு உட்பட்டதுமான நிலையில் இலங்கைத் தமிழரின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு எதையும் எவராலும் எட்ட முடியாது. ஆகையினால் தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்கு சிறிலங்கா அரசாங்கம் நிரந்தர தீர்வொன்றைக் காண விரும்பின் அதன் செயற்திட்டத்தை முன்வைத்து அதற்கான வழிவகைகளைச் செயற்பாட்டில் காட்டினால் அன்றி பேச்சுவார்த்தையால் தமிழருக்கு நன்மை எதுவும் ஏற்பட்டுவிடப் போவதில்லை எனபதே உண்மையாகும்.

# தமிழீழ ஆய்வு நிறுவன மே தினப்போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

மே தினத்தையொட்டி தமிழீழ ஆய்வு நிறுவனத்தால் நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விபரங்கள் வெளிவந்துள்ளன. உழவுத்தொழிலில் நடைபெற்ற போட்டியில் முதலாம் இடம் தா. ராமநாதன் (ஆவரங்கால்), இரண்டாம் இடம் பெ. திருபாலசிங்கம் (சங்குவேலி), மூன்றாம் இடம் செ சோமசுந்தாம் (சண்டிலிப்பாய்) ஆகியோரும், பனை பேணுதல் போட்டியில் முதலாம் இடம் க. ராஜன் (கந்தரோடை), இரண்டாம் இடம் பொ. தனபாலசிங்கம் (அராலி), மூன்றாம் இடம் த. தவராசா (சங்குவேலி) ஆகியோரும், துலாமிதித் தல் போட்டியில் முதலாம இடம் வீ. தனபாலசிங்கம், ச. செல்வராசா (கந்தரோடை), இரண்டாம் இடம் நா. மகேசன், ஆ. கிருஷ்ணபிள்ளை (ஆவரங்கால்) மூன்றாம் இடம் சிவலிங்கம், இ. நகுலேஸ்வரன் (தொல்புரம்) ஆகியோரும், கிடுகு பின்னல் போட்டியில் முதலாம் இடம் சி பொன்னம்பலம் (உடுவில்), இரண்டாம் இடம் வை. கணபதிப்பிள்ளை (புத்தூர்) மூன்றாம் இடம் மா. அண்ணாச்சாமி (ஆவரங்கால்) ஆகியோரும், குட்டான் இழைத்தல் போட்டியில் முதலாம் இடம் க. செல்லமுத்து (ஆவரங்கால்), இரண்டாம் இடம் மு கனகசிங்கம் (உடுவில்), மூன்றாம் இடம் து. ஜெயந்தினி (புத்தூர்) ஆகியோரும் வெற்றிபெற்றுள்ளனர்.

# தென் ஆபிரிக்காவிற்கான விஜயத்திற்கு எதிர்ப்பு

(ஜோஹானஸ்பேர்க்)

பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் டக்ளஸ் ஹேர்ட் வரும் கோடை காலத்தில் தென் ஆபிரிக்காவிற்கு விஜயம் ஒன்றை மேற்கொள்ள முடிவு செய்திருப்பதற்கு ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. கடந்த திங்கள் லண்டனில் தென் ஆபிரிக்க அரசின் வெளிநாட்டமைச்சரைச் சந்தித்த பிரிட்டிஷ் அமைச்சர் நாளை வண்டன் செல்லவிருக்கும் நெல்சன் மண்டேலாவைச் சந்திப்பதற்கு முன்பே இம்முடிவு வெளியிடப் பட்டமையானது, வெள்ளையரல்லாதோரின் குரலுக்குச் செவிமடுக்க பிரிட்டன் தயாராக இல்லை என்பதை எடுத்துக்காட்டுவதாக ஆபிரிக்கத் தேசிய காங்கிரஸ் கூறியுள்ளது.

# மேதினக் கலந்துரையாடல்

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்கள் மேதினத்தில் பங்கு பற்றுவது சம்பந்தமாக விரிவாக ஆராய்வதன் பொருட்டு சனசமூக நிலையங்களுக்கான கலந்துரையாடலொன்று யாழ் மாநகர சபையிலும், நகர சபைகளிலும், பிரதேச சபைகளிலும் இன்று காலை 10 மணிக்குச் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது

அவ்வப்பகுதி உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெறவுள்ள இக் கலந்துரையாடல்களுக்கு அவ்வப்பகுதி சனசமூக நிலையங்களின் நிர்வாக உறுப்பினர்களும், சமாச அங்கத்தவர்களும் பாலர் பாடசாலை ஆசிரியைகளும் அமைப்புக்களும் தவறாது பங்குபற்றும் வண்ணம் யாழ் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (24)

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் நாம் செய்த விசாரணையின் முடிவில் முரசொலி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பொறுப்பற்ற விதத்திலும், அநாகரிகமாகவும் நடந்து பத்திரிகாதர்மத்தை மீறியுள்ளார் எனக்கண்டறிந்துள்ளோம்.

மாணவ - ஆசிரிய - பெற்றோர் உறவுச்சங்கிலியில் வக்கிரமான சந்தேகத்தை உருவாக்கியுள்ள இந்தச் செய்தி தொடர்பான தமது ஆட்சேபனையை 14 04.1991 அன்று வடஇந்து மகளிர் கல்லூரி ஆசிரியைகளும வடமராட்சி ஆசிரியர் சங்கமும் முரசொலிக்கு அனுப்பிவைத்திருந்தது.

இதேவேளை தமிழாசிரியர் சங்கச் செயலாளர் திரு. மகாசிவமும்இந்தச் செய்திதொடர்பான தங்களது அதிருப்தியை பத்திரிகைகளுக்கு விடுத்திருந்தார். இதையும் உடனடியாகக் கருத்திலெடுத்துப் பிரசுரிக்க முரசொலி தவறிவிட்டது.

முரசொலியின் இந்த அலட்சிப்போக்கானது ஆசிரிய சமூசத்தின் வெறுப்பை சம்பாதித்ததுடன் பத்திரிகை எரிப்புக்கும் வழிகோலியது.

ஆனால் இந்த எரிப்பு நடவடிக்கை ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது. திரு. மகாசிவத்தினது கடிதத்தை 18.04 1991அன்று ஈழநாதம் பத்திரிகைபிரசுரித்த மறுநாள் (19.04.1991) பிரதம ஆசிரியரது பதில் கருத்துடன் முரசொலியும் கடிதத்தை பிரசுரித்தது.

முரசொலி ஆசிரீயரது பதில் குதர்க்க வாதங்களை கொண்டதாகவும் தங்களது தவறை நியாயப்படுத்தும் தன்மையுடையதாகவுமே அமைந்திருந்தது.

குறித்த செய்தியில் தவறுகள் இருக்கின்றது என்பதை தெரிந்து கொண்ட நிலையிலும் தொடர்ந்தும பொறுப்பற்ற விதத்தில் பொய்களைடம், புனைகதைகளையும் முரசொலி ஆசிரியர் பிரசுரித்து வந்தார்.

சர்ச்சைக்குரிய அந்தச் செய்தி 10, 11, 13, 18, 19, ஆகிய திகதிகளில் புதிய தகவல்களுடனும் விளக்கங்களுடனும் மீண்டும் மீண்டும் பிரசுரிக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட பெண்களை முதலில் ஆசிரியர்கள் என்றும், பின்னர் அவர்கள் ஆசிரியைகளல்ல குறித்த சிறுவனுக்கு ரியூசன் கொடுத்த பெண்கள் தான் என்றும்,

அதன் பின்னர் அந்தப் பெண்கள் உயர் தரப் பரீட்சையில் தோற்றுவதற்காக கொழும்பிலிருந்து வந்தவர்கள் என்றும்,

போதைப் பொருள் பழக்கமுடையவர்கள் என ஊகிக்கப்படுகின்றது என்றும்,

பாதிக்கப்பட்ட சிறுவன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார் என்றும், தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே தங்கி சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் செய்திகளை வெளியிட்டது. அத்துடன் தான் பிரசுரித்த செய்தியை மக்களும் நம்ப வேண்டும் என்பதற்காக விசேட நிருபர் ஒருவர் அனுப்பப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன என்றும் எழுதியது.

உண்மையில் இவை அனைத்துமே பொய்; அத்துடன் வக்கிர உணர்வுகளை ஏற்படுத்தக் கூடிய வகையில் புனையப்பட்ட கட்டுக்கதைகள் என எமது விசாரணை மூலம் தெளிவாகியுள்ளது.

உண்மை என்னவென்றால் குறித்த இளைஞன் உளவளர்ச்சி குன்றியவன். அதே சமயம் சம்பந்தப்பட்ட பெண்கள் என்பவர்கள் முறையே 12, 13, 15, 17, வயதினர் ஆவர் அதேவேளை முரசொலி பறைசாற்றியதைப் போல பாலியல் வன்முறை நடைபெறவில்லை.

முரசொலியின் மேற்குறித்த விடயங்கள் அனைத்துமே சமூகப் பொறுப்புணர்ச்சி உடைய பத்திரிகைகளுக்கு இருக்கக் கூடாதவை.

இத்தகைய குறைபாடுகள் அனைத்திற்கும் முரசொலியின் பிரதம ஆசிரியரே காரணமாவர்.

பத்திரிகைகளுக்கு இருக்க வேண்டிய சமூகநோக்குகளையும் கடப்பாடுகளையும் அவர் புரிந்து கொண்டிருந்தும் தங்களுக்குள்ள சில சுயலாபங்களுக்காக செய்திகளை திரித்தும், மிகைப்படுத்தியும் சமூகத்தில் ஓர் ஒழுங்குமுறை இல்லாமல் போய் விட்டதைப் போன்றதொரு மாயையை மக்களுக்கு உருவாக்க முயல்கின்ற தன்மையை இது காட்டுகின்றது.

முன்னர் தமிழீழத்துக்குள் வந்து கொண்டிருந்த சில மஞ்சள் பத்திரிகைகளைப் போல வக்கிர உணர்வுகளைத் தூண்டிநிற்கும் செய்திகளை, ஆவலைத் தூண்டும் விதத்தில், வெளியிடுவதன் மூலம் பத்திரிகையின் விற்பனையைக் கூட்டலாம் என்பதும் ஒரு நோக்கமாக இருந்திருக்கின்றது.

இவைகள் சமூகத் தீங்கானவை.

ஆகவே சமூகத்தின் எண்ணவோட்டத்தை உருவாக்கும் சக்தியைக்கொண்ட பத்திரிகை ஒன்றின் பிரதம ஆசிரியராக இருப்பதற்கான எல்லா தகுதிகளையும் தற்போதைய முரசொலி பிரதம ஆசிரியர் இழந்து நிற்கின்றார்.

இதற்கு முன்னரும் பலதடவைகள் முரசொலி பத்திரிகை பொறுப்பற்ற முறையில் செய்திகளை வெளியிட்டு வந்துள்ளது.

இவை குறித்து முரசொலி உரிமையாளருக்கும், பிரதம ஆசிரியருக்கும் பல தடவைகள் சுட்டிக்காட்டியிருக்கின்றோம். கலந்து பேசியிருக்கின்றோம்.

ஆனால் அந்தவறுகள் திருத்தப்படவில்லை.

அதன் தொடர்ச்சிதான் 10-04-1991 முரசொலி வெளியிட்ட உண்மைக்குப் புறம்பானதும், பொறுப்பற்றதுமான செய்திவெளியீடு ஆகும். இந்தச் செய்தியை தவறு என ஆசிரியர் சமூகம் சுட்டிக்காட்டி இருந்தும் உடனடியாக மறுப்புச் செய்தியை வெளியிட்டு உண்மை நிலையை வெளியிடாததுடன் அந்தத்தவறை நியாயப்படுத்தவும் முரசொலி பத்திரிகை முயன்றிருக்கின்றது.

எனவே மேற்குறித்த குற்றச் செயல்களுக்கான தண்டமாக 50,000 ரூபாவை முரசொலி உரிமையாளர் செலுத்த வேண்டும் எனப்பணிக்கப்பட்டுள்ளார்.

இப் பணம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளைச் செய்து வரும் தமிழ் அகதிகள் புனர் வாழ்வுக் கழகத்திடம் ஒப்படைக்கப்படும்.

# அமெரிக்கா திருட்டிற்கு உதவியதாக ஈராக் குற்றச்சாட்டு

(பாக்தாத்)

தென் ஈராக் பகுதியில் பல் தேச கூட்டுப்படைகள் தங்கியிருந்த காலத்தில்அப்பிரதேச எண்ணெய் வயல்களிலிருந்து பெறுமதியான உபகரணங்களை அபகரித்துச் செல்வதற்கு உதவியதாக அமெரிக்கா மீது ஈராக் குற்றம் சாட்டியுள்ளது. இந்த உபகரணங்கள் குவைத்திற்கு கொண்டு செல்லப்பட்டிருக்கலாம் எனவும் ஈராக் கூறியுள்ளது. மேலும் வட ஈராக் பகுதியில் கூட்டுப் படைகள் பொறுப்பிலிருக்கும் முகாம்களைப் பொறுப்பேற்கும்படி ஐ. நா சபையை ஈராக் கேட்டுள்ளது. அகதி முகாம்கள் அமைந்திருக்கும் பகுதியில் ஆயுதம் தாங்கிய குர்திஷ் கிளர்ச்சியாளர்கள் நடமாடுவதாக ஈராக் தெரிவித்துள்ளது. முகாம்கள் அமைந்திருக்கும் பகுதியிலிருந்து முபபது கிலோமீற்றர் அப்பால் பின்வாங்கிக் கொள்ள ஈராக் அரசு இணங்கியுள்ளது.

அகதி முகாம் அமைந்திருக்கும் சக்கோவ் நகரப் பகுதி ஈராக்கின் பிரதேசம் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் ஈராக் துருப்புகளின் பிரசன்னம் அப்பகுதியில் இருக்கும் என்று அமெரிக்க இராணுவப் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். கிளர்ச்சியாளர்கள் அகதிமுகாம்களை தளமாகப் பயன்படுத்த அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

இதனிடையில் தற்பாது காப்பு காரணங்களுக்காக அமெரிக்க விமானந்தாங்கிக் கப்பலொன்று துருக்கிக்கு அப்பால் மத்தியதரைக் கடலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

## வேட்புமனு தாக்கல் சுறுசுறுப்படைந்தது

(சென்னை)

லோக் சபைக்கும், சட்டப் பேரவைக்கும் நடைபெறவுள்ள தேர்தலில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்வது நேற்றுச் சுறுசுறுப்படைந்தது.

நேற்று முகூர்த்த நாள் என்பதாலோ என்னவோ வேட்புமனுத்தாக்கலும் வேகமடைந்தது. இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி உத்தரப் பிரதேசத்திலுள்ள அமேதி லோக்சபைத் தொகுதியில் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். இந்தத் தொகுதியில் இவர் நான்காவது முறையாகப் போட்டியிடுகிறார்.

சென்னையில் தி. மு. க. தலைவர் மு கருணாநிதி துறைமுகம் சட்டப் பேரவைத் தொகுதியில் நேற்று வேட்புமனுத் தாக்கல் செய்தார். முன்னாள் அமைச்சர் அன்பழகன் சேம்பக்கம் தொகுதியிலும், ஆயிரம் விளக்குத் தொகுதியில் அனைத்து இந்திய அண்ணா தி. மு க. சார்பில் முன்னாள் அமைச்சர் கே. ஏ கிருஷ்ணசுவாமியும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

வடசென்னை லோக்சபைத் தொகுதியில் தி மு. க. வேட்பாளர் ஆலடி அருணாவு நேற்று வேட்பு மனுவைத் தாக்கல் செய்தார்.

## சான்றிதழ் பெற நூற்றுக்கணக்கான மக்கள் வெய்யிலில்

(யாழ்ப்பாணம்)

முப்பத்தியெட்டாயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் அலுவலகத்தில் தேங்கிக் கிடக்க நூற்றுக்கணக்கான மக்கள் உச்சிவெய்யிலில் காத்திருக்கும் நிலைமையில் யாழ் செயலக பதிவாளர் அலுவலகம் செயற்படுகின்றது.

இவ் அலுவலகத்தில பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதற்கு சுமார் முப்பத்தியெட்டாயிரத்துக்கும் அதிகமான விண்ணப்பங்கள் அலுவலகத்திற்குவந்து சேர்ந்த போதிலும் இதுவரை இவற்றுக்கு சான்றிதழ்கள் வழங்க இவ் அலுவலகத்தால் முடியவில்லை தற்போது மிகவும் அவசர காரணங்களைக் காட்டி விண்ணப்பிக்கும் சிலருக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றது.

சான்றிதழைப் பெறுபவர்கள் இவ் அலுவலகத்தின் வெளிப்புற சாளரம் ஒன்றின் முன் கடந்த சிலநாட்களாக உச்சிவெய்யிலில் பல மணி நேரத்தை கழிக்கின்றனர்.

(க)

## தற்கொலை முயற்சி

க. பொ த (உ/த) பரீட்சையில் படித்த பகுதிகளில் பரீட்சைக்கு வினாக்கள் வரவில்லை என்ற காரணத்திற்காக வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மாணவி ஒருவர் அலரிவிதைகளையுண்ட நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(மு)

### மன்னார்

கின்றனர்.

மடு அகதிமுகாம் பரீட்சை நிலையத்தில் நேற்றுமுன் தினம் நடைபெற்ற பரீட்சையில் பிரயோககணித பாடத்திற்கு மூன்று மாணவர்களும், விலங்கியல்பாடத்திற்குஐந்து மாணவர்களும் தோற்றினர் இப் பரீட்சை நிலையத்தை மன்னார் கல்விப் பணிப்பாளர் திரு வேதநாயகம் ஒழுங்குபடுத்தினார்.

### பூமி அதிர்ச்சியில்

டங்களும் அழிந்து போயும், 15,000 குடும்பங்கள் வீடுகளை இழந்தும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு நிவாரண நடவடிக்கைகளை ஐ. நா சபை, அமெரிக்கா பிரித்தானியா மற்றும் நிக்குரகுவா நாடுகள் ஆரம்பித்துள்ளன.

### 5 இராணுவம்

- ★ ரீ. 56-2 ரக துப்பாக்கி 02
- ★ ரீ. 56-1 ரக துப்பாக்கி 01
- ★ மகசீன் 08
- ★ ஐ. எம். ரவைகள் 240

இத் தாக்குலை ஊர்ஜிதப்படுத்திய சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தெரிவித்தது. அதே வேளை அனுராதபுரத்தில் விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் மேலும் ஒரு இராணுவ வீரர் இறந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மாணவர்களுக்கான வருடாந்த பொது அறிவுப்போட்டி தாவடி மத்திய சனசமூக நிலையத்தால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (5.5 91) நடைபெறவுள்ளது. இதற்கான விண்ணப்ப முடிவுத் திகதி 27.4.91 ஆகும். போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் இத் திகதிக்கு முன் தங்கள் விண்ணப்பங்களை தாவடி மத்திய சனசமூக நிலையத்தில் தினசரி மாலை 3 மணிக்கும் 6 மணிக்கும் இடையில் பெற்றுக் கொள்ளலாம். இதில் ஆண்டு7 தொடக்கம் ஆண்டு 13 க்கு உட்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம் என அறிவிக்கப் பட்டுள்ளது.

## நியூசிலாந்து கப்பல பறிமுதல்

(கொழும்பு)

மக்தலீனா என்ற கப்பல் சிறிலங்கா அரசினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. இது பற்றித் தெரியவருவதாவது கடந்த மாதம் 21 ஆம் திகதி பிரகடனம் செய்யப்படாத றொக்கட், மற்றும் மோட்டார் வெடிபொருள்களுடன் கொழும்புத் துறைமுகத்தினுள் வந்தகப்பல் தொடர்பாக சுங்கத் திணைக்களம் விசாரணைகளை நடததியது. இவ விசாரணையின் முடிவில் நியூசிலாந்து குர்த் தீவுக்கு சொந்தமான இக்கப்பல் சிறிலங்கா அரசினால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளது.

## தீ விபத்தில் தந்தையும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

சொலிசன் திரவம் தீப்பற்றி எரிந்ததால் தந்தையும் மகளும் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

நேற்றிரவு குப்பிவிளக்குக்கு அருகில் வைத்து சொலிசன் திரவத்தை வேறுபாத்திரத்திற்கு ஊற்றிய குருநகரைச் சேர்ந்த ஆர். இரஞ்சிதராசாவும் (வயது 35) அவரது மகளான இ பவுதா (வயது 3) என்பவரும் பலத்த தீக்காயங்களுக்கு உள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### வவுனியா

அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவிற்கு கப்பல் துறைமுகங்களின் அமைச்சின் செயலாளர் ரி. கே. தசநாயக்காவும், மன்னார் மாவட்டத்திற்கு ஒஸ்ரி பெர்னாண்டோவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

### மேதின

டங்கள் என்பனவும் சிறப்பாக நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பேரணிகளில் தமிழரின் கலை கலாசாரங்களைப் பிரதிபலிக்கும் விசேட அலங்காரப் பவனியும் இடம் பெற உள்ளதாக தெரியவருகிறது.

### அஸாமில்

ளன. சிம்ரஞ்சிங்மான் அவர்களின் தலைமையிலிருந்துபிரிந்து முன்னாள் முதல்வர் சுர்ஜித் சிங் பானாலா தலைமையில் ஒரு குழுவும் பிரகாஷ் சிங் பாதல் தலைமையிலான இன்னொரு குழுவும் தேர்தல்களில் தனித்தனியே போட்டிடப் போவதாக அறிவித்துள்ளன

## யு. எஸ். எயிட் ஸ்தாபன விவசாயத் திட்டங்கள் மீளாய்வு வேலைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் நடைமுறையில் இருக்கும் ''யு எஸ். எயிட்'' ஸ்தாபனத்தின் விவசாய அபிவிருத்தித் திட்டம் தொடர்பான மீளாய்வு வேலைகள் தற்போது நடைபெற்று வருகின்றன.

மேற்படி நிறுவனத்தின் அதிகாரிகளும் திட்டத்தை இம் மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தும் அரச சார்பறற நிறுவனங்களின் இணைப்பு அதிகாரிகளும் களநிலையினால் மீளாய்வு வேலைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### அதிகாரிகள் கருத்து:

இத்திட்டத்தின் மீளாய்வு தொடர்பாக யாழ் செயலகத்தில் நடைபெறற கருத்தரங்கில் விவசாயத் திணைக்கள மற்றும் விவசாய சேவைகள் திணைக்கள அதிகாரிகளும் ஏனைய திட்டத்துடன் நேரடியாக சம்மந்தப்பட்ட அதிகாரிகளும் கருத்து வெளியிடுகையில் இத்திட்டத்திற்குத் தேவையான விதை பொருள்களும், இப்பொருள்களும் உரிய காலத்தில் கிடைக்கப்பெறாததினால் திட்டம் முழுமையான இலக்கினை அடையமுடியவில்லை என்று கூறினார்கள்.

### விவசாயிகள் கருத்து:

மேற்படி நிறுவன அதிகாரிகள் நேற்று களநிலையில் விவசாயிகளை சந்தித்தபோதுவிவசாயிகள் கருத்துத்தெரிவிக்கையில்; தமக்குத் தரப்பட்ட எரிபொருள் போதுமானதாக இல்லை என்றும் தரப்பட்ட சில விதைபொருள்கள் முளைக்கும் திறனற்றவை என்றும் பயிர்ச்செய்கையின்போது ஏற்படும் பூச்சி, பீடைகளின் தாக்கத்துக்கு எதிராகப் பாவிக்கப்படும் கிருமிநாசினி, பீடைநாசினிபோன்ற பொருள்களையும், நைதரசன அதிகளவுள்ள பசளை வகைகளையும், எமது பிரதேசத்திற்கேற்ற மற்றும் காலநிலைக்கேற்ற விதை பொருள்களையும் உதவித்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளும்படி கோரிக்கை விடுத்தனர்.

### யு. எஸ். எயிட்டின் கருத்து:

தற்போது மேற்கொள்ளப் பட்டுவரும் இவ்விவசாய அபிவிருத்தித் திட்டத்தின் பெறுபேறுகளை மீளாய்வு செய்தே தொடர்ந்து இத்திட்டத்தின் ஊடாக மேற்கொள்ள வேண்டிய நடவடிககைகளைப்பற்றி தீர்மானிக்க இருப்பதாக மேற்படி நிறுவனத்தின அதிகாரிகள் தெரிவித்தனர். தொடர்ந்து கிடைக்க இருக்கும் உதவிகளில் மேலும் அதிக எண்ணிக்கையான விவசாயிகளைச் சேர்த்துக்கொள்ள இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(க)

## புதிய திட்டத்திற்கு சோவியத்தில் அங்கீகாரம்

(மொஸ்கோ)

சோவியத்யூனியனின் பொருளாதார பிரச்சினையை சமாளிப்பதற்காகஅரசாங்கத்தால முன்வைக்கப்பட்ட பொருளாதாரத் திட்டத்தை சோவியத் பாராளுமன்றம் அங்கீகரித்துள்ளது

கடந்த இரண்டு நாட்களாக சோவியத யூனியன் பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்திற்குப் பின்னர் நேற்று இந்த அங்கீகாரம் வழங்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் மூலம் அரசியல் அடிப்படையில் ஒழுங்கு செய்யப் பட்டவேலை நிறுத்தங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதோடு சுரங்கத்தொழில், மின்சார உற்பத்தி போன்ற பிரதான கைத்தொழில்களுக்கு விசேட முக்கியத்துவமும் அளிக்கப்படுகிறது.

1992 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் அளவில் சகல பொருள்களின் விலைகளும், ஸ்திர நிலையில் வைக்கப்பட வேண்டும் என்றும் இத் திட்டத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## தொழிலாளர் கற்கைநெறி வகுப்பிற்கு அதிகளவு விண்ணப்பங்கள்

(யாழ்ப்பாணம்)

இலங்கையின் எந்த ஒரு பாகத்திலும் இதுவரை தெரிவு செய்யாத வகையில் இம்முறை யாழ். பல்கலைக்கழகத்தில் தொழிலாளர் கற்கைநெறி சான்றிதழ் வகுப்பிற்கு தொழிலாளர்கள் வந்து சேர்ந்துள்ளதாக இந்த கற்கைநெறிக்கு பொறுப்பாக உள்ள யாழ் பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை கூறியுள்ளார்.

இந்த கற்கைநெறி குறித்து அவர் மேலும் குறிப்பிடும் போது கொழும்பில் உள்ள தொழிலாளர் கற்கைநெறி நிறுவனத்தில்கூட இந்த தொகையில் ஒருவருட பயிற்சிக்கு தொழிலாளர்களை அழைப்பதில்லை என்றதுடன், இந்த பயிற்சிநெறியை வடபகுதியில் உள்ள தொழிலாளர்களுக்கு வழங்குவதன் மூலம் தொழிலாளர்கள் தமது கல்வித்துறையில் பொதுஅறிவு வளர்ச்சியை பெற்றுக்கொள்கின்றனர். அத்துடன் தமது உற்பத்தி ஆற்றலை வளர்த்துக கொள்கின்றனர் தமது ஆளுமையை விருத்திசெய்துகொள்வதுடன் தாம்சார்ந்த தொழிலாளர் சமூகத்திற்கு ஒரு தொழில் உந்துசக்தியாகவும் விளங்குகின்றனர்.

## பெற்றுக் கொள்ளவும்

(நமது நிருபர்)

அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் 13 ஆம்திகதி வழங்கப்பட்ட கிராம சேவகர்பிரிவுகளிலும். 23 ஆம் திகதி வழங்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளிலும் நிவாரணம் கிடைக்காதவர்கள் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 00 மணிக்கு நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் நிவாரணம் பெற்றுக் கொள்ளலாம் என தமிழர் புனர் வாழ்வுக் கழகம் அறிவித்துள்ளது.

## மரக்கன்றுகள் உற்பத்தி

(யாழ்ப்பாணம்)

மரம் நடுகைத் திட்டத்திற்கென மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் முயற்சிகளில் தமிழீழ ஆய்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது. வாகை, எலும்புருக்கி, கொக்குமந்தரை, திருக்கொன்றல் போன்ற மரங்களின் விதைகள் சேகரிக்க வசதியுள்ள பொது மக்கள் இதனை தமிழீழ ஆய்வு நிறுவனத்திடம் கொடுத்துதவுமாறு வேண்டப்படுகின்றனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.